



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேற்று முன்தினம் (19.10.2024) வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, மணலூர்ப்பேட்டையில் கழகத்தினர் – இளைஞர் அணியினர் மற்றும் அனைத்துத் தரப்பு பொதுமக்களும் உற்சாக வரவேற்பளித்தனர்.






துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறும் மாவட்ட ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்க செல்லும் வழியில், தியாகதுருகம், வீரசோழபுரம் டோல்கேட், கள்ளக்குறிச்சி நகரம் உள்ளிட்ட இடங்களில் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள், உடன் பிறப்புகள் – இளைஞரணியினர் – மகளிர் – பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.

### சுவாமி விவேகானந்தரின் கோத்திரக் கேள்விக்கு

# மனோன்மணியம் சுந்தரனார் கூறியது என்ன?

## ஆளுநருக்கு பீட்டர் அல்போன்ஸ் பதிலடி!

**சென்னை, அக். 21-**

**சுவாமி விவேகானந்தரின் கோத்திரக் கேள்விக்கு மனோன்மணியம் சுந்தரனார் அளித்த பதில் குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டு ஆளுநர் ரவிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

சென்னை டிடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பாடப்பட்ட தமிழ்த் தாய் வாழ்த்தில் "தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநல் திருநாடும்" என்ற உன்னதமான வரிகளை விட்டு விட்டு பாடியது மன்னிக்க முடியாத மாபெரும் தவறு. பாடியவர்கள் அந்த வரிகளை மறந்து விட்டனர் என்று டிடி சொல்வது பெரும் அபத்தம். குழுவிலே பாடிய அனைவருக்கும் ஒரே நேரத்தில் அந்த ஒரு வரி மட்டும் மறந்துபோனது என்று நம்புவதற்கு எட்டு கோடி தமிழர்களும் இளிச்சவாயர்களல்ல.

தமிழ்த்தாய் வாழ்த்தை 'ரசித்துப்' பாடுவேன் என்று புளகாங்கிதம் அடையும் ரவி, தவறு நடந்தவுடனே தவறைத் திருத்தி மீண்டும் சரியாக பாட வைத்திருக்க வேண்டும்.

ஒரு தவறு நடக்கும் போது, நடப்பது தவறென்று தெரிந்தபின்னரும் அந்தத் தவறை கண்டும் காணாதது போல நடந்துகொள்வது கயமை நிறைந்த பாசாங்குத்தனம்.

தமிழ்நாட்டின் உணர்வுகளை தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெறவேண்டும் என்ற முதலமைச்சரின் கோரிக்கை மிகச்சரியானது.

அந்த அற்புதமான வாழ்த்தை உயிரும், உணர்வும் கலந்துபாடிய மனோன்மணியம் சுந்தரனார் வானுலகில் இன்று கண்ணீர் விட்டு அழுதிருப்பார். இது தொடர்பாக அவரது வாழ்வில் ஒரு முக்கிய செய்தி.

திருவனந்தபுரத்தில் சுந்தரனார் இல்லத்திற்கு சுவாமி விவேகானந்தர் வருகிறார். உணவருந்திய பின் உரையாடிக் கொண்டிருந்தபோது விவேகானந்தர், சுந்தரனாரிடம், "தாங்கள் என்ன கோத்திரம்?"என்று கேட்க சுந்தரனார் சொன்ன பதிலை தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

"வேறு ஒரு தினமாகில் வினாவினைக் கேட்டவுடன் நான் வெகுண்டிருப்பேன்.

உறவின் விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில் எனக்கும் கோத்திரத்துக்கும் சம்பந்தம் கிடையாது. தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சார்ந்தவன் நான் என ஆத்திரமின்றி கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்" என்று தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

ஆம்!ஆளுநர் ரவி அறியவேண்டும்.நாங்கள் தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்.

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# சேந்தமங்கலம் பேரூராட்சியில் புதிய குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், அக். 21 -

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சேந்தமங்கலம் பேரூராட்சியில் 8.8 ச.கி.மீ பரப்பளவு கொண்டது. இப்பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இப்பேரூராட்சியின் மக்கள் தொகை 19750 மற்றும் தற்போதைய மக்கள் தொகை சுமார் 21528 ஆக உள்ளது. இப்பேரூராட்சியில் சொந்த குடிநீர் ஆதாரமான காரவள்ளி கருவாட்டாறு திட்டத்தின் மூலம் 13.25 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய் அமைக்கப்பட்டு 7 மேல்நிலை தொட்டிகள் மூலம் நாளொன்றுக்கு 70 LPCD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. காரவள்ளி கருவட்டாறு குடிநீர் திட்டமானது 1984 ஆம் வருடம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் சுமார் 25 வருடங்களுக்கு மேல் ஆவதால் பல்வேறு இடங்களில் பைப் லைனில் உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் வீணாவதுடன் பொதுமக்களுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுவதால் புதியதாக 202425ஆம் ஆண்டுக்கான கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் மூலம் சேந்தமங்கலம் பேரூராட்சியில் ரூ.605.00 லட்சம் மதிப்பீட்டில் காரவள்ளி இருவட்டாறு தலைமை நீரேற்று நிலையம் முதல் பேருந்து நிறுத்தம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் அண்ணாநகர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி (குப்பநாயக்கனூர்) வரை ஏற்கனவே உள்ள மெயின் பைப் லைன் மாற்றியமைப்பதற்கான பணியினை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.பொன்னுசாமி, சேந்தமங்கலம் ஒன்றிய செயலாளர் அ.அசோக்குமார், சேந்தமங்கலம் பேரூர் செயலாளர் ந.தனபாலன், காளப்ப நாயக்கன்பட்டி பேரூர் செயலாளர் டி.என்.முருகேசன், சேந்தமங்கலம் பேரூராட்சி தலைவர் சித்ரா தனபாலன், நாமக்கல் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் வெ.பெ. இராணி பெரியண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, கலைவாணன், சார்பு அணி நிர்வாகிகள் சாம் சம்பத், ஆனந்த்பாபு, பொன் சித்தார்த், பா.கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

### வாலாஜா ஊராட்சியில்

# தூய்மைப் பணிக்கு மின்கல வண்டிகள் வழங்கல்!

சென்னை, அக். 21 -

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி இராணிப்பேட்டை மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை விரைந்து செயல்படுத்திட வாலாஜா ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 13 ஊராட்சிகளுக்கு குப்பைகளை எடுத்துச் செல்ல ஏதுவாக ரூ.68.58 இலட்சம் மதிப்பீட்டிலான 27 மின்கல வண்டிகளை தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கினார்.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி. பா. ஜெயசுதா, ஒன்றியக் குழுத் தலைவர் திரு. வெங்கட்ரமணன். துணைத் தலைவர் இராதாகிருஷ்ணன். வருவாய் கோட்டாட்சியர் இராஜராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவகுமார், சரவணன் மற்றும் ஒன்றிய செயலாளர் எம்.சண்முகம், இரா. சிவஞானம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் வி.சி.சக்திவேல், பி.கே. பொன்னன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.






புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், ரூ.39.95 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 17.10.2024 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் விஜயலெட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுவாமிநாதன், ரமேஷ், நேரடி நெல் கொள்முதல் நிலைய கண்காணிப்பு இயக்குநர் எம்.பரமசிவம், ஒன்றியக்குழு உறுப்பினர் அ.திருப்பதி, ஆத்தங்கரைவிடுதி ஊராட்சிமன்றத் தலைவர் கோ.அருணாசலம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



மன்னார்குடியில் நடைபெற்ற சுயமரியாதைச்சுடர் மன்னை ப .நாராயணசாமி அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பு பொதுக்கூட்டத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கடலூர் இள.புகழேந்தி பேசினார். உடன் கழக சட்ட திருத்த குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, அவைத்லைவர் க.தனராஜ், நகரச் செயலாளர் வீரா.கணேசன், நகர் மன்றத் தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றியக்குழுத் தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன், ஒன்றியச் செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், வி.எஸ்.ஆர்.தேவதாஸ், பால ஞானவேல் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.